

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பவானி சாலை அசோகபுரம் பகுதியில் செயல்படும் தமிழ்நாடு துணிநூல் பதனிடும் ஆலையில் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் புதிய ஸ்டென்டர் இயந்திரத்தின் சேவையினை வீட்டுவசதி மற்றும் நகர் புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் துவக்கி வைத்தனர். நிகழ்வில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈரோடு கிழக்கு ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சி தலைவர் ராஜகோபால் சுன்கரா, அரசு முதன்மை செயலாளர் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை தர்மேந்திரபிரதாப் யாதவ், துணிநூல் துணை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர் மற்றும் கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நவமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## கர்நாடகாவில் பலத்த மழை!
## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

பெங்களூரு, ஜூலை 28–

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அணைகளும் வேகமாக நிரம்புகிறது. கனமழையால் அணைக்கு மீண்டும் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இந்நிலையில், கர்நாடக அணைகள் வேகமாக நிரம்பி வருவதால் அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் நீர் திறப்பு விநாடிக்கு 5,067 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கபினி அணையிலிருந்து 23,000 கன அடி நீரும், கே.ஆர்.எஸ். அணையிலிருந்து 2,500 கன அடி நீரும் திறக்கப்படுகிறது.

கிருஷ்ணராஜசாகர் அணைக்கு காலை நிலவரப்படி நீர்வரத்து விநாடிக்கு 29,552 கன அடியாக உள்ளது. கபினி அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 20,749 கன அடியாக உள்ளது.

காவிரி ஆற்றில் நீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதால் இந்த தண்ணீர் அகண்ட காவிரியாக தமிழகம் நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இதனால் குறைந்து வரும் மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று முன்தினம் (26.07.2023), கேரள மாநிலம், கோழிக்கோட்டில், பொது சிவில் சட்டத்திற்கு எதிராக நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநில மாநாட்டில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் முஸ்லிம்கள் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் சையத் சதிக்குலி சிகாப் தங்கல், சட்டமன்ற உறுப்பினர் குன்ஹாலிகுட்டி மற்றும் முன்னணியினர் கலந்து கொண்டனர்.

# தூய்மைப் பணியில் மனித உயிரிழப்பை ஒழிக்க அரசின் நடவடிக்கை என்ன?
## மக்களவையில் டி.ஆர்.பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28

தூய்மைப் பணிகளில் மனிதர்கள் ஈடுபடுத்துவதை அறவே ஒழித்திட 2013ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒன்றிய அரசின் தடைச் சட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படாமல் பெயரளவில் மட்டும் இருப்பதால் இப்பணிகள் மேற்கொள்வோர் கொடுமையான இறப்புக்கு ஆளாகிறார்கள். இத்தகைய சாவுகளைத் தடுக்க அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களின் விவரங்கள் என்ன? என்று மக்களவையில் டி.ஆர்.பாலு 25.7.2023 அன்று வினா எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே பின்வருமாறு தெரிவித்தார்.

அதுவருமாறு :

கழிவுகளை அகற்றிடும் பணிகளை மனிதர்களைக் கொண்டு மேற்கொள்வதைத் தடை செய்யும் நோக்கில் தூய்மைப் பணியாளர்



தடை செய்தல் மற்றும் மறுவாழ்வுச் சட்டம் 2013ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. 6.12.2013 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள இந்தச் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகளின்படி தனி நபர்களோ, நிறுவனங்களோ மனிதர்களைத் தூய்மைப் பணிகளில் ஈடுபடுத்துவது நாடு முழுவதும் சட்டரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், பல்வேறு மாநிலங்களில் இந்தத் தடைச் சட்டம் முறையாக செயல்படுத்தப்படாததால் ஆபத்து நிறைந்த கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் செப்டிக் டேங்க் எனப்படும் கழிவுநீர் தொட்டிகளில் ஆபத்து நிறைந்த சூழலில் பணியாற்றிய பலரின் துர்மரணம் நிகழ்ந்துள்ளன.

எனவே, இந்த நிலையை ஒழிக்க ஒன்றிய அரசால் “நமஸ்தே” என்ற பெயரில் செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கழிவகற்றல் பணிகள் எந்திரங்களைக் கொண்டு மேற்கொள்வது, பணியாளர்களுக்குத் தக்க பயிற்சி அளித்தல், உரிய பயிற்சி பெற்ற ஊழியர்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள் பதிவு செய்தல், பதிவு பெற்ற நிறுவனங்கள் தனி நபர்களை மட்டுமே கழிவு நீர் சாக்கடைக் கழிவு அகற்றும் பணிகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துதல், பயிற்சி பெற்ற தூய்மைப் பணியாளர்கள் இணைந்து குழுக்கள் அமைத்து பணிகள் மேற்கொள்வதை ஊக்குவித்தல், தூய்மைப் பணியாளர்கள் எந்திர சாதனங்கள் வாங்க முதலீட்டு மானியம் வழங்குதல், பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீடு வழங்குதல், பணி சார் பாதுகாப்பு பயிற்சி அளித்தல் போன்ற அம்சங்களை இந்த “நமஸ்தே” திட்டம் உள்ளடக்கியது.

ஆனால், இந்தத் திட்டம் எப்போது தொடங்கப்பட்டது, நிதி ஒதுக்கீடு எவ்வளவு, பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை என்ன, திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் எந்த அளவுக்கு இந்தப் பிரச்சனை குறைக்கப்பட் டுள்ளது போன்ற எந்த புள்ளிவிவரங்களும் தகவல்களும் அமைச்சரின் பதிலில் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விமானப் போக்குவரத்துத் துறையில் தேவையான

# பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்த அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?
## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

திராவிட முன்னேற்றக் கழக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், அன்று மக்களவையில், விமானப் போக்குவரத்து துறைக்கு தேவையான பொறியாளர்கள், விமானிகளுக்கு உரிய பயிற்சியளிக்கவும், பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்தவும், ஒன்றிய அரசின் முன் முயற்சிகள் என்னென்ன? என்று ஒன்றிய அரசின் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் ஜெனரல் வி.கே.சிங்கிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின்



விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :

36 விமானி பயிற்சி நிறுவனங்ளும், 54 விமான பொறியாளர் பயிற்சி நிறுவனங்களும் இந்தியாவின் 57 நகரங்களில் இயங்கி வருகின்றன. கடந்த 2022 ஆண்டில் மட்டும் 2022 விமான ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடத்திற்கும் 3500க்கு அதிகமான விமான பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், விமானிகளின் தரத்தை மேம்படுத்தவும், தேவையான கொள்கை முடிவுகளை இந்திய விமான நிலைய ஆணையம் எடுத்துள்ளது. பயிற்சி நிறுவனங்களுக்கு உரிய நிதிச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

கர்நாடாகவில் பெலகாவி, மகாராஷ்ட்ரத்தில் ஜல்காவன், மத்திய பிரதேசத்தில் கஜுரா, அசாமில் லலாபாரி போன்ற நகரங்களில் 2021 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு உள்ளது. குஜராத்தில் பவ்நகர், ஆந்திர பிரதேசத்தில் கடப்பா, ராஜஸ்தானில் கிஷன்கர், தமிழ்நாட்டில் சேலம் போன்ற நகரங்களில் பயிற்சி நிறுவனங்கள் துவக்கபட உள்ளன.

மேலும் சர்வதேச தரத்திலான பயிற்சி வழங்க ஒன்றிய அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இவ்வாறு ஒன்றிய இணையமைச்சர் பதிலளித்தார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?
## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 28-

ஆர்கானிக் (அ) கரிம உரங்கள் மற்றும் பயோ உரங்களின் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்புக்காக ஒன்றிய அரசு மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகள், நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:

ஆர்கானிக் (அ) கரிம உரங்கள் மற்றும் பயோ உரங்களின் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்பை ஆய்வு செய்ய NITI ஆயோக்கின் கீழ் ஒரு பணிக்குழுவை அரசாங்கம் அமைத்திருக்கிறதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் செயல்பாடுகள், மாநில வாரியாக?

இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை உரங்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதன் விவரங்கள்? கடந்த எட்டு ஆண்டுகளில் நாட்டில் கரிம உரங்களை வழங்குவதற்காக ஆண்டு வாரியாக மற்றும் மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

இவ்வாறு அவர் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு :

(a) & (b): நிதி NITI ஆயோக், பேராசிரியர் ரமேஷ் சந்த், உறுப்பினர் (வேளாண்மை) NITI ஆயோக் தலைமையில், “கௌசாலாக்களின் பொருளாதார நம்பகத்தன்மையை மேம்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தி பயோ உரங்களின் உற்பத்தி மற்றும் ஊக்குவித்தல்” என்ற தலைப்பில் ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டது.

பரம்பரகத் கிரிஷி விகாஸ் யோஜனா (PKVY) மற்றும் வடகிழக்கு பிராந்தியத்திற்கான மிஷன் ஆர்கானிக் மதிப்பு சங்கிலி மேம்பாடு (MOVCDNER) ஆகியவற்றின் மூலம் நாட்டில் இயற்கை வேளாண்மை மற்றும் இயற்கை உரங்களை ஒன்றிய அரசு ஊக்குவிக்கிறது. இரண்டு திட்டங்களும் இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆரம்பம் முதல் இறுதி வரையிலான ஆதரவை வலியுறுத்துகின்றன, அதாவது உற்பத்தி முதல் செயலாக்கம், சான்றிதழ் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவை திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

நாடு முழுவதும் வடகிழக்கு மாநிலங்கள் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் PKVY செயல்படுத்தப்படுகிறது, அதேசமயம் MOVCDNER திட்டம் வடகிழக்கு மாநிலங்களில் பிரத்தியேகமாக செயல்படுத்தப்படுகிறது.

PKVY இன் கீழ், நாட்டின் மாநிலங்கள் / யூடி எஸ் களுக்கு ரூ. நிதி உதவி வழங்கப்படுகிறது. 50000/ஹெக்டருக்கு 3 ஆண்டுகளுக்கு,



ரூ. 31000/ஹெக்டருக்கு/3 ஆண்டுகளுக்கு DBT மூலம் நேரடியாக விவசாயிகளுக்கு கரிம உரங்கள் உட்பட பண்ணையில் மற்றும் பண்ணைக்கு வெளியே உள்ள கரிம உள்ளீடுகளுக்கு வழங்கப்படுகிறது.

MOVCDNER, உதவியாக ரூ. 46,575/ஹெக்டருக்கு 3 ஆண்டுகளுக்கு FPO உருவாக்கம், கரிம உள்ளீடுகளுக்கு விவசாயிகளுக்கு ஆதரவு, தரமான விதைகள்/ நடவுப் பொருட்கள் மற்றும் பயிற்சி, கைப்பிடித்தல் மற்றும் சான்றளிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 3ஆண்டுகளுக்கு ரூ.32500/ஹெக்டருக்கு நிதி உதவி DBT மூலம் விவசாயிகளுக்கு ஆஃப் பண்ணை / பண்ணையில் உள்ள கரிம இடுபொருட்களுக்கு ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. நாட்டில் உள்ள மாநிலங்களுக்கு இயற்கை உரம் வழங்குவதற்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும், திட்டங்க ளின் கீழ் விவசாயத்திற்கு வெளியே / பண்ணையில் உள்ள கரிம உள்ளீடுகளுக்கு நேரடி பணப் பரிமாற்றம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புகளில் கரிம உரத்திற்கான ஏற்பாடும் அடங்கும்.

நல்ல தரமான பயோ உரங்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, இந்திய அரசு உரக் கட்டுப்பாட்டு ஆணையின் (1985) கீழ் அதன் தரத்தை ஒழுங்குபடுத்துகிறது. தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக 32 தர பரிசோதனை ஆய்வகங்களுக்கு ஒன்றிய அரசு அறிவித்து அதன் ஆய்வகங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அனைத்து வகையான உரங்களையும் ஆன்லைனில் மிகவும் எளிதாகவும் எளிமையாகவும் பதிவு செய்ய, அரசாங்கம் ஒரு வலைதளத்தை (https://frs.dbtfert.nic.in/) உருவாக்கியுள்ளது.

மண்ணின் ஆரோக்கியம் மற்றும் வளம் மற்றும் நிலையான உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக உரங்களின் ஒட்டுமொத்த நுகர்வு குறைக்க விவசாயிகளை ஊக்குவிக்க, அரசாங்கம் “தாய் பூமியின் மறுசீரமைப்பு, விழிப்புணர்வு, ஊட்டச்சத்து மற்றும் மேம்பாட்டிற்கான PM திட்டம் (PMPRANAM)” என்று அறிவித்துள்ளது.

மாற்று உரங்கள் மற்றும் ரசாயன உரங்களின் சீரான பயன்பாட்டை ஊக்குவிக்க மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள். இந்தத் திட்டத்தின் கீழ் மானியச் சேமிப்பில் 50% பணத்தைச் சேமிக்கும் மாநிலத்திற்கு மானியமாக வழங்கப்படும்.

மிஷன் லைஃப் திட்டத்தின் கீழ் ஆர்கானிக் மற்றும் பயோ உரங்களைப் பயன்படுத்தி இயற்கை மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்காக பல்வேறு சுற்றுச்சூழல் முன்முயற்சியை அரசாங்கம் எடுத்து வருகிறது.

தேசிய கரிம மற்றும் இயற்கை வேளாண்மை மையம் (NCONF) மற்றும் காசியாபாத், நாக்பூர், பெங்களூர், இம்பால் மற்றும் புவனேஸ்வரில் அமைந்துள்ள அதன் மண்டல இயற்கை மற்றும் இயற்கை வேளாண்மை மையம் ஆகியவை பல்வேறு மனிதவள மேம்பாட்டுப் பயிற்சிகளை ஏற்பாடு செய்து வருகின்றன.

TikKisanSammelan for 500 பங்கேற்பாளர்கள், 100 பங்கேற்பாளர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்த ஒரு நாள் பங்குதாரர் ஆலோசனைகள்/ மாநாடுகள், இயற்கை விவசாயம் குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சி மற்றும் நாடு முழுவதும் இயற்கை மற்றும் இயற்கை விவசாயம் பற்றிய தகவல்களை பரப்புவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு வகையான கரிம மற்றும் உயிர் உரங்களைப் பயன்படுத்துதல். NCONF மற்றும் RCONF கரிம மற்றும் இயற்கை விவசாயம் மற்றும் கரிம மற்றும் உயிர் உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாடு பற்றிய ஆன்லைன் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்கின்றன.

இந்த அனைத்து அம்சங்களையும் விவசாயிகளுக்குக் கற்பிப்பதற்காக ICAR பயிற்சிகளை வழங்குகிறது, முன்வரிசை ஆர்ப்பாட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்கிறது.

PKVY மற்றும் MOVCDNER திட்டங்களின் மாநில வாரியாக ஆம் மாநிலங்களில் தேவைக்கேற்ப ஒதுக்கப்படுகிறது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் கூறியுள்ளார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் செய்யூர் சட்டமன்றத் தொகுதி இடைக்கழி நாடு பேரூர் தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் ‘சிறுபான்மையினர் பாதுகாப்பு அரண் கலைஞர்’ என்ற தலைப்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார் உடன் மாவட்ட கழக அவைத் தலைவர் ச. இனிய அரசு, பேரூர் செயலாளர் மோகன் தாஸ் பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி. சம்யுக்தா, அய்யனார் உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# உயிர் உரங்களை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுமா?
## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கேள்வி!

நாமக்கல், ஜூலை. 28-

டெல்லியில் கோடைக் கால மாநிலங்களவை கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. அவையில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் கலந்து கொண்டு, இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சரிடம் உரங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

மண்ணின் ஊட்டச்சத்தை ஊக்குவிக்க மரபு உரத்துடன், உயிர் உரங்களைத் திணிக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், அத்திட்டங்களின் விவரங்கள் மற்றும் அதற்காக மாநில வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு குறித்தும், விவசாயிகள் உயிர் உரங்களைப் பயன்படுத்தும் போது அவர்களுக்கு மானியம் எப்போது கிடைக்கும்? கூட்டுறவு உரக் கடைகளில் போதுமான உயிர் உரங்கள் கையிருப்பில் உள்ளதா, அவ்வாறு இல்லையெனில், விவசாயிகள் உயிர் உரங்களை எவ்வாறு பெறுவார்கள்? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான மாநில அமைச்சர் ஸ்ரீ பக்வந்த் குபா, இந்த நுண்ணுயிர் உரங்களில் ஊட்டச்சத்துக்கள் எதுவும் இல்லை. உயிர் உரத்தில் இருக்கும் நுண்ணுயிரிகள் மண்ணிலும் காற்றிலும் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் பயிர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்கின்றன. இதற்காக 2015-16 ஆம் ஆண்டில் இருந்து நுண்ணுயிர் உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஒன்றிய அரசு பரம்பரகத் கிருஷி விகாஸ் யோஜனா (பிகேவிஒய்) மற்றும் மிஷன் ஆர்கானிக் வேல்யூ செயின் டெவலப்மெண்ட் (MOVCDNER) திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்த (PKVY) திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.50000 நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில் ரூ.31000 விதைகள், உரங்கள், உயிர்பூச்சிக்கொல்லி



கள், கரிம உரம், உரம் / மண்புழு உரம், தாவரவியல் சாறுகள் போன்ற இயற்கை இடுபொருட்களுக்காக விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

மேலும் வடகிழக்கு பிராந்தியங்களுக்கான கரிம மதிப்பு சங்கிலி மேம்பாட்டு (MOVCDNER) திட்டத்தின் கீழ் ஆர்கானிக் உள்ளிட்ட கரிம உள்ளீடுகளின் கொள்முதல் மற்றும் பண்ணை உற்பத்திக்காக எக்டேருக்கு 3 ஆண்டுகளுக்கு ரூ.32500 நிதி உதவி வழங்கப்படுகிறது.

தேசிய கரிம மற்றும் இயற்கை வேளாண்மை மையம் (NCONF) மூலம் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை, உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களின் பயன்பாட்டை விவசாயிகளிடையே பல்வேறு வழிகளில் ஊக்குவித்தது. அச்சு, மின்னணு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என்றும் உயிர் உரங்கள் ஏற்கனவே உள்ள சில்லறை விற்பனை கடைகள் மூலம் விவசாயிகளுக்கு இரசாயன மற்றும் கரிம உரங்களுடன் விற்கப்படுகின்றன என்றார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்
### ஜூலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.